# பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) கல்லூரிக்கு உரித்தற்ற வாகனங்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருத்தல்.**

(i) கல்லூரியினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற, இருப்பினும் பாதுகாப்பு அமைச்சு மற்றும் தரைப்படைக்குச் சொந்தமான மொத்தம் ரூபா 51,321,500 கிரயம் கொண்ட வாகனங்கள், பதவிநிலைக் கல்லூரியின் நடைமுறையல்லாச் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் அச்சொத்துக்களும் திரட்டிய நிதியமும் ரூபா 51,321,500 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ii) உரித்தற்ற வாகனங்களின் பெறுமானத்தேய்வு கணக்குகளில் சீராக்கப்பட்டிருந்தமையால் பெறுமானத்தேய்வு ஏற்பாடு ரூபா 23,712,900 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் திட்டிய நிதியம் ரூபா 13,448,600 குறைத்தும் ஆண்டிற்கான நட்டம் ரூபா 10,264,300 அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன.

(iii) கல்லூரியினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற, இருப்பினும் தரைப்படைக்குச் சொந்தமான வாகனங்களை அகற்றுகையில் ஏற்பட்டிருந்த ரூபா 2,160,000 நட்டத்தினை கணக்குகளில் சீராக்கியமை

காரணமாக மீளாய்வாண்டிற்கான நட்டம் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) வைப்புக் கணக்கு**

ஒப்பந்தகாரர்களிற்குச் செலுத்தப்பட வேண்டிய பிடி காசு மற்றும் பதவியணியினரின் சம்பளமற்ற விடுமுறைகளிற்காக மேற்கொள்ளப்பட்ட கழிப்பனவுகள் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. 2010 பெப்ரவரி மாதம் முதல் 2012 சனவரி மாதம் வரை சம்பளமற்ற விடுமுறைகளாக கழிக்கப்பட்டிருந்த ரூபா 340,628 மேற்படி வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமை காரணமாக நடைமுறையல்லாச் சொத்துக்கள் அத்தொகையால் கூட்டிக் காட்டப்பட்டிருந்தன.

### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8 (1) ஆம் பிரிவு | ஒவ்வொரு நிதியாண்டிற்கும் பாதீடு தயாரிக்கப்பட்டு குறித்த நிதியாண்டு தொடங்குவதற்கு மூன்று மாதங்களிற்கு முன்னர் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், 2012 ஆம் ஆண்டின் பாதீடு 2013 பெப்ரவரி 27 ஆந் திகதியன்றே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி 12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.2.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் பாதிடப்பட்ட ஐந்தொகை, பாதிடப்பட்ட வருமானச் செலவினக் கூற்று மற்றும் பாதிடப்பட்ட காசோட்டக் கூற்று என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயற்பாடுகளிலிருந்து உருவாகிய நிதி விளைவுகள் ரூபா 6,410,036 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 2,017,213 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 4,392,823 தொகையான பின்னடைவு அவதானிக்கப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா 4,392,823 தொகையான பின்னடைவிற்கு கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சில செலவுகள் ரூபா 22,844,365 ஆல் அதிகரித்திருந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பதவிநிலைக் கல்லூாரி நடாத்திவருகின்ற பட்டப்படிப்பு கற்கை நெறிக்கு மீளாய்வாண்டில் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 102 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த வகையில் முன்னைய ஆண்டில் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 83 ஆக இருந்தது. விரிவான வருமானக் கூற்றின் படி மீளாய்வாண்டின் மொத்தச் செலவினம் ரூபா 145,076,708 ஆக காணப்பட்டதுடன் அதற்கமைய பட்டதாரி ஒருவருக்காக ரூபா 1,422,321 செலவிடப்பட்டிருந்தது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) களஞ்சியப் பொருட்கள் மெய்மையாய்வு

(i) இருப்புப் பதிவேடுகள் களஞ்சியத்திற்கு வெளியே பேணப்படாமையால் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்த இருப்பு மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியவில்லை.

(ii) கல்லூரியின் ஒவ்வொரு பிரிவினாலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற சொத்துக்கள் தொடர்பான விபரங்களை உள்ளடக்குவதற்கு தனியான பொருட் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

(அ) 2011 ஆம் ஆண்டில் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 64 மில்லியன் என தீர்மானிக்கப்பட்டு கல்லூரியின் மூன்று மாடிகளைக் கொண்ட சின்டிகேட் கட்டிடத்தை கடற்படையின் கண்காணிப்பின் கீழ் வெளிவாரி ஒப்பந்தகாரரைக் கொண்டு நிர்மாணித்துக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதில் ரூபா 46.2 மில்லியன் ஏற்பாடு 2011 ஆம் ஆண்டில் கடற்படைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 4.2 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. ரூபா 42 மில்லியன் மீண்டும் திறைசேரிக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் கல்லூரிக்கான ஏற்பாட்டிலிருந்து ரூபா 17.8 மில்லியன் இந்த நிர்மாணத்திற்காக வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் அந்த ஆண்டின் இறுதி வரை நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் விலைகள் அதிகரித்திருந்தமை மற்றும் காலதாமதம் காரணமாக மூல மதிப்பீடு ரூபா 86.5 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. மேலும், நிர்மாண நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்தமை காரணமாக 2013 ஆம் ஆண்டில் தொடங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த பாடநெறிகளை எதிர்பார்த்த அளவில் விரிவுபடுத்துவதற்கு முடியாது போயிருந்தது.

**3.4 நிதிகளைப் பயன்படுத்தல்**

வருடாந்தம் பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்த மூலதன ஏற்பாடுகள் கல்லூரியினால் பயன்படுத்தப்பட்டிருக்காமை காரணமாக ஆண்டின் இறுதியில் திறைசேரிக்கு செலவு வைக்கப்படுதல் தொடர்ச்சியாக தொடர்ச்சியாக இடம்பெற்று வந்திருந்தது. அவ்வாறு 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 27.2 மில்லியன், ரூபா 55.7 மில்லியன் மற்றும் ரூபா 16.8 மில்லியன் தொகை பயன்படுத்தப்படாது திறைசேரிக்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது.

**3.5 வாகனப் பயன்பாடு**

கல்லூரிக்காக பாதுகாப்பு அமைச்சால் 17 வாகனங்களும் தரைப்படையால் 14 வாகனங்களும் வழங்கப்பட்டிருந்ததுடன் இவ்வாகனங்களின் உரித்தினை கல்லூரிக்கு கையேற்றிருக்கவில்லை. முற்சக்கர வண்டியொன்று 2011 திசெம்பர் 17 ஆந் திகதி முதல் பயன்பாடின்றி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. கல்லூரியினால் பயன்படுத்தப்பட்டு

வருகின்ற வாகனங்கள் ஒரு பிரிவினால் கட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும், இராணுவம் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் வாகனங்கள் போக்குவரத்துப் பிரிவாலும் விமானப் படையால் வழங்கப்பட்ட 04 வாகனங்களும் கடற்படையால் வழங்கப்பட்ட 02 வாகனங்களும் அவற்றின் பிரிவுகளாலும் (Wing) கட்டுப்படுத்தக்கூடிய விதத்தில் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பன்முகப்படுத்தப்பட்டிருந்தன.

### 3.6 பதவியணியினர் முகாமைத்துவம்

கல்லூரியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 100 ஆக காணப்பட்டதுடன் சேவையில் ஈடுபட்டிருந்த பதவியணியினர் எண்ணிக்கை 92 ஆக இருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2012 ஆம் ஆண்டு தொடர்பில் கல்லூரியின் மீண்டெழும் செலவினங்களிற்காக ரூபா 103,000,000 தொகையும் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 200,000,000 தொகையும் கிடைத்திருந்ததுடன் மீளாய்வாண்டில் அதில் மீண்டெழும் செலவினமாக ரூபா 109,691,297 தொகையும் மூலதனச் செலவினமாக ரூபா 146,473,933 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பான நிதிசார் இலக்குகளையும் பௌதீக இலக்குகளையும் அந்தந்தக் காலத்திற்கேற்ப இனங்காணக்கூடிய வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. செயல் நடவடிக்கைத் திட்டத்துடன் ஒப்பிடக்கூடிய வகையில் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட ஏற்பாடுகளிற்கும் உள்ளபடியான செலவினங்களிற்குமிடையே குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 4.3 ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 150 நாட்களிற்குள் பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் நடவடிக்கைகள் தொடர்பிலான வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் பாராளுமன்றித்திற்கு முன்வைக்கப்பட வேண்டிய போதிலும், 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளிற்கான வருடாந்த அறிக்கைகள் 2013 நவம்பர் 09 ஆந் திகதி வரை பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) மூலதன ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்
(ஆ) பதவியணியினர் கட்டுப்பாடு
(இ) நிர்மாண நடவடிக்கைகள்
(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு